## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் - 2020

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்குகள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போதும், சமர்ப்பிக்கும் போதும் காசு பாய்ச்சல் கூற்றிலும், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிலும் ஒப்பீட்டு ரீதியான தகவல்களாக மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று | எதிர்வரும் வருடத்திற்கான கணக்குகள் தயாரிக்கும் போது காசுப் பாய்ச்சல் கூற்றையும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றையும் மாதிரியின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கும் போது சொத்துக்கள் கூற்றில் மீள் மதிப்பீட்டு ஒதுக்க நிதியத்தின் பெறுமதியான ரூபா 264,500 தொகை உள்ளடக்கப்படாதிருந்ததுடன், ஆண்டின் மிகை ரூபா 51,426,693 தொகை வேறொரு நிரலின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | உள்ளாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்கு திறைசேரியினால் அவ்வப்போது வழங்கப்பட்ட பணம், ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் நிரந்தர வைப்பொன்றில் வைப்புச் செய்யப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கும் நோக்கில் வீடமைப்பு கடன் நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்ட போதும் அவ்வாறு கடன் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களினால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மேலும் உரிய வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மீதி தொடர்பான விபரங்கள் மற்றும் நிலையான வைப்பு பிணையாக வைக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்துகின்ற விபரங்கள் என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது நிலையான வைப்பை பிணையாக வைத்தமை தொடர்பாகவும், அந்த பிணையின் அடிப்படையில் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடன் மீதி தொடர்பாக விபரங்கள் ஐந்தொகையில் குறிப்பாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பொது வைப்புக் கணக்குகளுக்குரிய மீள்பெறுவனவுகள் ரூபா 4,287 தொகை மற்றும் வருமான கணக்கிற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 2,989 தொகை என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்பாட்டு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட பண கொடுப்பனவான ரூபா 763,433,089 தொகைக்கு பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கைத்தவறினால் காசுப் பாய்ச்சல் கூற்றில் இந்த தகவல்கள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்காக பேணிச் செல்லப்பட்ட 6000/0/0/6/0/85 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 163,190,675 தொகை மீளாய்வாண்டின் போது நிதிய கணக்கில் சீராக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அவ்வாறு மாற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் இறுதி மீதி இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த மீதி புதிதாக உருவான பெறுமதி ஒன்றாக இல்லாதிருந்தமையினால் கணக்குகளில் வெளிப்படுத்துதல் தேவையற்றிருந்தது. | கணக்கீட்டு கொள்கை மாறுபடுமாயின் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.6 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்கு திறைசேரியினால் அவ்வப்போது வழங்கப்பட்டுள்ள பணம் ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்பு கடன் வழங்கும் நோக்கில் வீடமைப்பு கடன் நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வைப்பு பணம் மற்றும் அந்த பணத்தை முதலீடு செய்வதன் மூலம் வருடாந்தம் உழைக்கப்பட்ட வட்டி என்பவற்றை உள்ளடக்கி 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வீடமைப்பு நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 37,851,984 ஆகும். எனினும், 2008 நவம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த வீடமைப்பு நிதியத்தில் இருந்து உத்தியோகத்தர்களுக்காக எந்தவொரு கடன் தொகையும் வழங்கப்படாதிருந்தமையினால் இந்த கடன் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | தற்போது உள்ள கடன் பணம் முழுமையாக அறவிடப்படும் வரை மேலும் கடன் வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன், கடன் பணத்தை முழுமையாக அறவிட்டதன் பின்னர் கடன் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். | முறையான ஆய்வு ஒன்று மேற்கொண்டு வீடமைப்பு நிதியத்தை தொடர்ந்தும் பேணிச் செல்லுதல் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 51,426,693 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,176,292 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 50,250,401 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. 6000/0/0/6/0/85 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 163,190,675 தொகை மீளாய்வாண்டின் போது நிதியக் கணக்கில் சீராக்கப்பட்டமை இந்த வேறுபாட்டிற்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு**

6000/0/0/6/0/85 ஆம் இலக்க பொது வைப்புக்கணக்கின் ஆரம்ப மீதி மீளாய்வாண்டின் போது நிதியக் கணக்கில் சீராக்கப்பட்டமையினால் 1003-1 செலவின விடயத்தில் மாற்றப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 794,000,000 வருமானமும், ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், தேயிலை மற்றும் எரிவாயு செலவினங்களாக ரூபா 743,905,787 செலவினமும் புதிய வருமானச் செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 99(4) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிர்வாகத்திற்கான ஆளணி நடைமுறைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 1979 இன் 78 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 158(அ) பிரிவின் பிரகாரம் உரிய ஆளணி நடைமுறைகள் நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |